**Series : RKM/1** Code No. **10/1**

Roll No. | | | | | | | |

Candidates must write the code on the title page of the answer-book.

- Please check that this question paper contains 4 printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains 6 questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**

# TAMIL
# தமிழ்

*Time : 3 Hours]* *[Marks : 100*

நேரம் : 3 மணி] [மதிப்பெண்கள் : 100

பகுதி - 'அ'

1. (அ) எவையேனும் ஐந்தினுக்குச் சான்றுகள் தருக. 5
   - (i) பண்புத்தொகை
   - (ii) சொல்லாகு பெயர்
   - (iii) வினையெச்சம்
   - (iv) தொழிற் பெயர்
   - (v) அடுக்குத் தொடர்
   - (vi) பால் வழுவமைதி
   - (vii) முற்றும்மை

   (ஆ) எவையேனும் ஐந்தினுக்கு மட்டும் ஏற்ற சொற்களை இட்டுப் பூர்த்தி செய்க. 5
   - (i) தன்மை இடத்தில் வரும் வினைமுற்றுக்கு உதாரணம் ______.
   - (ii) ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலை அடைந்த பொருளுக்கு பெயராகி வருவது ______
   - (iii) விளிவேற்றுமை என்பது ______ ஆகும்.
   - (iv) இடம் ______ வகைப்படும்.
   - (v) பால் என்பது ______ என்ற பொருளைத் தரும்.
   - (vi) யானைக்கன்று என்பது ______ ஆகும்.
   - (vii) நீங்கள் என்பது வேற்றுமை உருபு ஏற்கும்போது ______ எனத்திரியும்.

(இ) எவையேனும் ஐந்தினை அடைப்புக் குறிகளில் கூறியபடி மாற்றி எழுதுக. 5

(i) மரம் போன்றவன் (வேற்றுமை விரியாக்குக)

(ii) நன்று (உரிச்சொல்லை பொருத்துக)

(iii) கற்றேன் (முன்னிலை இடமாக்குக)

(iv) ஆடு (விகுதிபெற்ற ஏவலாக்குக)

(v) அழிந்தான் (வியங்கோள் வினைமுற்றாக்குக)

(vi) உழைக்க வந்தாய் (இடைச் சொல்லைப் பொருத்துக)

(vii) படித்தான் (வினையாலனையும் பெயராக்குக)

2. (அ) ஏதேனும் ஒரு பகுதியில் உள்ள குறிப்புகளைக் கொண்டு விரிவான கட்டுரை எழுதுக. 12

(i) முன்னுரை - பாரதியார் பிறப்பும் இளமையும் -இளமையில் கவிபாடும் திறம் - எட்டையபுர அரசவைக் கவிஞர் - தமிழாசிரியர் பணி - பத்திரிகை ஆசிரியர் - நாட்டுத் தொண்டு - தேசியகவி - புதுவை வாழ்வு - இறுதிக் காலம் - முடிவுரை

(ii) முன்னுரை - உழவின் சிறப்பு - உழுவார் உலகத்தார்க்கு ஆணி - உழவின் பழமை - பழங்கால உழவு முறைகள் - அறிவியலால் ஏற்பட்டுள்ள வளர்ச்சி- பசுமைப் புரட்சி- உழவைப் போற்றும் முறை - நம் கடமை - முடிவுரை

(iii) முன்னுரை - கடல் தோன்றிய வரலாறு- உலகில் மூன்றில் ஒரு பங்கு -எண்ணற்ற உயிரினங்களுக்குப் பிறப்பிடம் -கடலின் பயன் - மழைக்கு உதவுதல் - உப்பு விளைக்க- கடலில் கிடைக்கும் முத்து , பவளம், சங்கு, மீன் - கடற்காற்று - கடற்கரை - முடிவுரை

(ஆ) சுற்றுலாச் சென்றிட உனது தந்தைக்கு ஒப்புதல் கேட்டு, கடிதம் ஒன்று வரைக. 10

**(அல்லது)**

சாலைகளைச் சீர்படுத்துதல் தொடர்பாக நகராட்சி ஆணையருக்கு மடல் வரைக

இரண்டு கடிதங்களிலும் உனது முகவரி
சங்கரன்/சங்கரி
7, நேமம் காலனி
செந்தமிழ்நகர்
சென்னை - 600 001

(இ) அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளி அறிவியல் பரிசோதனை கூடம் திறப்பு விழா -அறிக்கை எழுதுக 8

**(அல்லது)**

சாரதி சமூகக் கூடத்தில் நடைபெற்ற ஆண்டு விழா - அறிக்கை எழுதுக.

3. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக. **15**

பொருளை வாங்குபவர் நுகர்வோர் எனப்படுவர். பொருளை வாங்கும் நுகர்வோரைப் பாதுகாப்பது நுகர்வோர் சட்டம் ஆகும். நுகர்வோர் சட்டம் 1986 இல் இயற்றப்பட்டது. நுகர்வோர் இயக்கமானது அமெரிக்காவில் "ரால்ப் நாடர்" என்பவரால் தொடங்கப்பட்டது. நம் நாட்டில் 587 நுகர்வோர் நீதிமன்றங்கள் உள்ளன. நுகர்வோர் புகார் மூன்று மாதத்திற்குள் தீர்க்கப்பட வேண்டும். வழக்கு தொடர்பாக ஆய்வு, சோதனை இவை இருப்பின் ஐந்து மாதத்திற்குள் தீர்க்கப்பட வேண்டும்.

குறைகளைத் தீர்த்தல், மாற்றிக் கொடுத்தல், தொகையினைத் திருப்பி அளிக்கும்படி கூறுதல், நஷ்ட ஈடு வழங்குதல், சிறை தண்டனை விதித்தல் எனப் பல்வேறு விதமான தீர்ப்புகள் அளிக்கப் படுகின்றன. தீர்ப்பு சம்மந்தமாக மேல் முறையீடு செய்ய எண்ணுபவர் 30 நாட்களுக்குள் செய்தல் அவசியம்.

(i) நுகர்வோர் எனப்படுபவர் யார் ? **2**

(ii) நுகர்வோர் சட்டம் என்றால் என்ன ? **2**

(iii) நுகர்வோர் சட்டம் எப்போது யாரால் தோன்றியது ? **2**

(iv) நம் நாட்டில் எத்தனை நுகர்வோர் நீதிமன்றங்கள் உள்ளன ? **2**

(v) நுகர்வோர் புகார் எப்போது, எப்படித் தீர்க்கப்பட வேண்டும்? **2**

(vi) தீர்ப்பு எவ்வாறு அளிக்கப்படுகிறது ? **2**

(vii) மேல் முறையீடு எப்போது செய்ய வேண்டும் ? **2**

(viii) இப்பகுதிக்கு ஏற்ற தலைப்பிடுக. **1**

## பகுதி - 'ஆ'

4. (அ) ஏதேனும் ஒரு பாடற் பகுதியைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.

முத்தமிழ் சேர்வித்து வசனக் கூட்டம் - கலை
முற்றிலும் உணர்ந்திடுங் கொண்டாட்டம் - நெஞ்சில்
முன்னுகின்ற போதுதொறும்
தென் மலையில் மேவுகுறு முனிக்கும் அச்சம் செனிக்கும்.

(i) இப்பாடல் வரிகள் இடம் பெறும் நூல் எது ? **1**

(ii) ஆசிரியர் யார் ? **1**

(iii) தென்மலை என்பது எது ? **1**

(iv) குறுமுனி யார் ? **1**

(v) இப்பாடல் வரிகளில் எந்த மலையின் வளம் இடம் பெறுகிறது ? **1**

**அல்லது**

வீடின தன்றறன் யானும் வீகலேன்
தேடினன் கண்டனன் தேவி யே எனா
ஆடினன் பாடினன் ஆண்டும் ஈண்டும் பாய்ந்
தோடினன் உலாவினன் உவகைத் தேன் உண்டான்

(i) இக்கூற்று யாருடையது ? 1

(ii) 'தேடினன்' - தேடியது யார் ? யாரை ? 1

(iii) உவகைத்தேன் உண்ண காரணம் என்ன ? 1

(iv) இப்பாடல் எந்நூலில் எப்பகுதியில் வந்துள்ளது ? 1

(v) ஆசிரியர் யார் ? 1

ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 10

(i) கடல் பற்றிக் கவிஞர் வள்ளத்தோள் கூறுவன யாவை ?

(ii) சிலுவைப் பாடு என்னும் தலைப்பில் ஆசிரியர் கூறும் கருத்துகளை எழுதுக.

(iii) பாண்டியன் நன்மாறனின் சிறப்புகளாகச் சீத்தலைச் சாத்தனார் கூறுவன யாவை ?

(iv) புகார் நகரத்தின் சிறப்பை இளங்கோவடிகள் வழி விளக்குக.

5. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 15

(i) சாதி வேற்றுமையையும், தீண்டாமைக் கொடுமையையும் ஒழித்ததில் பெரியாரின் பங்கை விவரி.

(ii) உடல் நலம் பற்றி இராஜம்மாள் தேவதாஸ் கூறுவன யாவை ?

(iii) உமறுப்புலவரின் நன்றி மறவாப் பண்பினை விளக்குக.

(iv) புலவர்களை ஔவையார் ஏன் புகழ்ந்து பாடவில்லை ?

(v) கபிலர் எவ்வாறு கலிலியோவுக்கு முன்னோடி ஆகிறார் ?

6. ஏதேனும் ஒரு தலைப்பில் துணை நூற் கட்டுரை எழுதுக. 10

(1) வேலை வந்து விட்டது

(2) விடிவதற்குள்

(3) மண்ணாசை